உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ச.] 1915ஹ செப்டம்பர்மீ [பகுதி கூ.

## மைத்திராயணி யோபநிஷத்து.

### முதல் பிரபாடகம்.

பிருகத்ரதனெனு மரசன் தமது இராச்சியத்தில் தமது மூத்த குமாரனை வைத்துத்தமது சரீரம் நிலையல்லவென வெண்ணி வைராக்கியத்தை யடைந்து வனத்திற்குச் சென்றான்.

உ. அவ்வனத்தில் மேலான தவத்தைச் செய்துகொண்டு சூரியனைப் பார்த்தவண்ணம் தூக்கியகையை யுடையவனாக விருந்தான்.

ங. ஆயிரம்வருடஞ் சென்றபிறகு புகையில்லாத நெருப்பினைப் போலப் பிரகாசரூபமாய்ப் பிரமநிஷ்டரான பகவான் சகாயன்யமுனிவர் அவன் சமீபத்தேயடைந்தார்.

ச. எழுந்திரு! எழுந்திரு! வரத்தைக் கேட்டுக்கொள் என முனிவரர் அரசனைப்பார்த்துச் சொன்னார்.

ரு. அவனவருக்கு நமஸ்காரஞ்செய்து சொன்னதாவது, ஓ பகவானே! நான் ஆத்மவித்தல்ல, நீர் தத்துவவித்தென்று நாங்கள் பெரும்பாலும் கேட்டிருக்கிறோம். அதை யெமக்கு நீர் சொல்லவேண்டுமென்றனன்.

௬. ஓய்! இட்சுவாகு வம்சத்திற்பிறந்த அரசனே! இவ்விதஅசக்கியமான கேள்வியை முதலில் கேட்கவேண்டாம், மற்றைய விச்சைகளைக்கேட்டுக்கொள் என்றனர் முனிவர்.

௭. சாகன்னியருடைய திருவடிகளிற் பணிந்து அரசனிந்தக் கதையைச் சொல்லினன்.

௮. ஓ! பகவானே! எலும்பு தோல் நரம்பு சீழ் மாமிசம் சுக்கிலம் சோணிதம் கோழை கண்ணீர் இவைகளாற் கெடுக்கப்பட்டதும், மலம் மூத்திரம் வாதம் பித்தம் கபம் இவைகளின் கூட்டமாயதுமான, துற்கந்தம் நிறைந்த சாரமில்லாத இச்சரீரத்தில் இச்சாபோகங்களாற் பிரயோசன மென்ன?

௯. காமம் குரோதம் லோபம் மோகம் விஷாதம் ஆசூயை இஷ்டத்தைவிடல் அநிஷ்டத்தையடைதல் பசி தாகம் வயோதிகம் மிருத்தியு ரோகம் சோகம் இவைகளால் நிறைந்த சரீரத்தில் இச்சாபோகங்களால் பிரயோசன மென்ன?

௧௦. இவையனைத்தும் காட்டீக்கள் கொசுக்கள்முதலியவற்றைப் போலும், புல்லைப்போலும் நாசமடைவதென வறிந்தோம், இவைகளைச் சொலுவதா லென்ன பிரயோசனம்?

௧௧. எமக்கு முந்தியிருந்த மகாபராக்கிரம சாலிகளான சக்கிரவர்த்திகளனேகரும், சுத்துயும்நன், இந்திரதுயும்நன், குவலாயுசுவன், யுவஞசுவன், வத்தியாசுவனன், அசுவபதி, சசிபிந்து, அரிச்சந்திரன், அம்பரீஷன், அநுக்தன், சுவர்யாதி, அநரண்ணியன், அட்சசேனன் முதலியவர்களும்; மேலும் மருத்தன் பரதன் முதலிய சிலவரசர்களும் சுற்றத்தினர் விழித்துக் கொண்டிருக்கும்போதே பெரிய செல்வங்களை யிழந்து இவ்வுலகை நீங்கிப் பரலோகமடைந்தார்கள், இவர்களாலென்ன பிரயோசனம்?

௧௨. வேறு கந்தர்வர் அசுரர் யட்சர் இராட்சதர் பூதங்கள் நட்சத்திர கணங்கள் பிசாசங்கள் உரகர் கிரகங்கள் இவைகட்கும் பந்தம் காண்கின்றோம்.

௧௩. இவ்வளவு சொல்லியும் என்னபிரயோசனம்? அனேகசமுத்திரங்கள் வற்றவும், மலைகள் சொருங்கவும், துருவன் இடம்விட்டு

நகரவும், மரங்கள் நிலைகுலையவும், பூமியமிழ்ந்தவும், தேவர்களிடம் விட்டு ஓடவும் நேர்தலால், நான் இது என்ற சமுசாரத்தில் இச்சா போகங்களால் என்ன பயன்?

கசு. துக்கங்களால் கட்டுப்பட்டவனுக்கே நீங்காமல் இங்கிருக்கும்படி நேரிடுகிறது? ஆகலின் என்னை நீ உத்தாரணஞ் செய்யவேண்டும், கிணற்றிற்கிடக்கும் தவளைப்போல நானிந்தச் சம்சாரத்தில் இருக்கின்றேன், ஓபகவானே! நீயே யெனக்குக்கதி, ஓபகவானே! நீயே யெனக்குக்கதி.

## இரண்டாம் பிரபாடகம்.

இனி பகவான் சாகாயன்யர் அன்புடன் அரசனைப் பார்த்துச் சொன்னதாவது, ஓ மகாராஜ! இட்சுவாகு வம்சத்தின் கொடிக்குத் தலையாயுள்ளவனே! பிரகத்ரத! நீ ஆத்மாவை யறிந்தமையால் கிருத கிருத்தியன், மருத் என்பவனுக்குப் பிரசித்தனான புத்திரனாய், இவனல்லவோ உனதாத்மா, எந்தச் சச்சிதானந்தனை உனக்கு நான் நிரூபிக்கவேண்டும்.

உ. எவன் வெளிப்பொருள்களைக் கைக்கொண்டு மேலே கிளம்புவானாய், துக்கப்படாதவனாய், தமசைப் பிரேரிக்கின்றானோ இவனாத்மா, பிறகு இச்சரீரத்தினின்று வெளிகிளம்பிய விந்தத் தெளிவு பரஞ்சோதியையடைந்து சுவரூபத்துடன் நிற்கின்றதோ அதுஆத்மா, அது அமிர்தமும் அபயமும் பிரமமுமாமென்றார்.

ந. இனி இந்தப்பிரம வித்தையும் எல்லா உபநிடத வித்தைகளும் ஓ அரச! எமக்குப் பகவான் மைத்ரேயர் உபதேசித்தவை, அவற்றை யுனக்குச் சொன்னேன்.

சு. இனிப்பாவங்களை யொழிந்தவர்களாய்ப் பூரண தேஜசையுடையவர்களாய் ஊர்த்துவரேதசுக்களாய் உள்ளவாலகில்யர் பிறகு பிரமாவைப் பார்த்துச் சொன்னார்கள்.

ரு. ஓ பகவானே! ஒரு வண்டியைப்போலச் சேதனமானது இச்சரீரம், எந்த இந்திரியங்கட்கு அகப்படாத பூதத்திற்கு இம்மகிமையுள்ளது, எத்துடன்இச்சரீரம் சம்பந்தமானவுடன் சேதனம்போலத் தோன்றுகிறது, இதற்கேவுதல் செய்பவன்எவன், எங்கட்குச்சொல்ல வேண்டுமென்றனர்,

சு. அவர்களைப்பார்த்துச் சொன்னதாவது, எவன் வாக்கால் மேலே யுள்ளவனாகக் கேட்கப்படுகின்றான் அவன் சுத்தன் பூதன் சூன்யன் சாந்தன் பிராணனில்லாதவன் அநீசன் அநந்தன் அட்சயன்

ஸ்திரன் சாசுவதன் அஜன் சுவதந்திரன் தன்மகிமையுள்ளவன் அவனாலே இச்சரீரம் சேதனம்போலப் பிரதிஷ்டை செய்யப்பட்டது இவன்தானிதற்குப் பிரேரகன்.

எ. எங்ஙனம் என்று கேட்க அவர்கட்குபதேசித்தார், இவன் சூட்சுமன் கிருக்கிக்கப் படாதவன் காணப்படாதவன் புருஷனெனப் பேருள்ளவன் அஞ்ஞானபலத்தால் இங்கே போரம்சத்துடன் சுழல்கிறான், அவனே சுழுத்தியிற்போலப் புத்திபூர்வமாய் விழித்துக் கொள்கிறான், எவனிவனதம்சமோ அவன் சேதனமாத்திரன், பிரதி புருஷன்களிலும் க்ஷேத்திரஞ்ஞனாய்ச் சங்கல்பம் அத்தியவசாயம் அபிமானம் இவைகளைக் குறியுடையவனாய்ப் பிரஜாபதியாய் உலகங்களைப் பார்ப்பவனாய் இருக்கிறான், அச்சேதனனாலே இச்சரீரம் சேதனம் போலேயமைக்கப்பட்டது இச்சரீரத்திற்கு அவனேபிரேரகன்.

அ. ஓபகவ! ஈஸ்வரன் எங்ஙனம் அம்சத்துடனிருப்பானென அவர்கள் கேட்டார்கள்.

கூ. *பிரஜாபதியன்றோ முதலிலிருந்தார், அவரொருவனாயிருந்து திருப்தியடையவில்லை, அவன் தன்னாலே தன்னைத்தியானம் செய்து அனேக பிரஜைகளை யுண்டாக்கினார், அவைகளவனிடத்து அறிவில்லாமல் கட்டைகள் போல் நிற்பதைக் கண்டான். அவன் அதிலுந் திருப்தியடைய வில்லை, அவன் இவைகளுடைய இருதயத்திலே அறிவையுண்டாக்குவதற்காக நாம் பிரவேசிப்போமென்று நினைத்தான், பிறகு அவன் வாயுவாகவும் ஜீவனாகவும் தன்னைச் செய்து உள்ளே புகுந்தான், அவனொருவனாயுள்ளே பிரவேசிக்கவில்லை, அவனைந்தாகத் தன்னைப் பிரித்துப் பிரவேசித்தான், பிராணன் அபானம் சமானன் உதானன் வியானன் எனச் சொல்லப்படுகிறான்.

மணவழகு.

---

*ஈண்டு பிரஜாபதி யென்றது ஈஸ்வரனை, அவனொருவனாயிருந்து திருப்தியடைய வில்லையென்றது, தம்மிடத்தில் லயகாலத்திலொடுங்கிய ஆன்ம கோடிகளைக் கருமபரிபாகங்களால் பிரேரிக்க சங்கற்ப முண்டாயிற்றென்பதாம், தன்னாலே தன்னைத் தியானஞ் செய்து என்பது, தம்முளடங்கிய சேதனாசேதனபிரபஞ்சத்தை முந்திய கல்பத்தில் சிருஷ்டித்தவழி சிருஷ்டித்தானென்பது. கட்டைக ளென்றது சரீரமாத்திரனிற்பது, அவனைந்தாகத்தன்னைப்பிரவேசித்தானென்றது ஐந்திலும் வியாபித்தானென்பது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவபிரான் கருணையுஞ் சீவர்கள் கடமையும்.

தொகுதி 4, பக்கம் 178 தொடர்ச்சி.

இத்திருவாக்கில் ஒரு பண்டமாற்றுச்செய்தியை நாம் அறிகின்றோம். அஃதாவது, எல்லாவறிவும் எல்லாவாற்றலும் நிறைந்த மலரகிதராகிய சிவபிரான் தம்மைக் கொடுத்துச் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடைய சீவனை யதற்குமாற்றாகக் கொள்ளுகின்றாரென்பதே. அப்பெருமானைப்பெற்றமையாற் சீவன் எய்திய பயன் அளப்பிலாவானந்தம். இச்சீவனால் அவ்விறைவன் பெற்றது யாதுமின்று. என்னே யவர்கருணைத்திறம்! மனத்தானினைத்தற்கும் வாயாற் பேசற்கும் அளவுபடுவ தின்றாகலின், இம்மட்டிற் சிவபிரான் கருணையென்னும் பகுதியை நிறுத்தி மேற்சீவர்களின் கடமையைப்பற்றிச் சிறிது கூறுவேன்.

## (௩) சீவர்களின்றன்மை.

ஆன்மா எப்பொருளைச்சார்ந்ததோ அப்பொருளின் வண்ணமாந்தன்மையுடையதென்பது வேதாகம சித்தாந்தம். வெளி, இருளோடு கூடுங்காலிருளாகவும், ஒளியோடு கூடுங்கால் ஒளியாகவும் ஆதல் போலவும், ஒருபளிங்கு, செந்நிறத்தைச் சார்ந்துழிச் செம்மையாகவும், கருநிறத்தைச் சார்ந்துழிக்கருமையாகவுந் தோன்றுதல் போலவும், ஆன்மா, மலவிருளிற்கலந்துழி அதன் மயமாகவும், சிவவிளக்கத்திற்பொருந்துழிச் சிவமயமாகவும் விளங்கும். அவ்வப்பொருளைச்சாருங்காற் பிரிப்பின்றியத்துவிதமாகவே சம்பந்த முற்றுக் கலந்திருக்கும். மலத்தோடு சம்பந்தமுற்றுழியந்நிலையும் அத்துவிதநிலையாமோவெனின், அதுவும், ஒன்றென்றாவது வேறென்றாவது கூறப்படாமையின் அத்துவிதமேயாம். இதனை "ஆணவத்தோடத்து

விதமானபடி மெய்ஞ்ஞானத், தாணுவினோடொத்து விதஞ்சாருநாளெந்நாளோ" என்னுந்தாயுமானார் திருவாக்கும் வலியுறுத்தும், ஆகவே தனக்கெனவொரு சுதந்தரமுமின்றிச் சார்ச்சிப்பொருள்களின்றன்மையே தன்றன்மையாகக் கோடல் ஆன்மாவி னிலக்கணங்களுண்முக்கியமானதொன்றாம். இன்னும் இச்சீவன் சகசமலமாகிய ஆணவத்தாற் பிணிப்புண்டு அதனீக்கத்தின்பொருட்டு இறைவனாற்றரப்பட்ட மாயா மலகன்மமலங்களின் காரியங்களாகிய தநுகரண புவனபோகங்களைப்பெற்று மாறி மாறிப் பிறக்குமியல்புடையதாம். மனம் புத்தியங்காரஞ் சித்தமென்னும் அந்தக் கரணங்களாகிய கருவிகளாற் பொறிகளின் வாயிலாகப்புலங்களை நுகர்ந்து அதனால் மீண்டு மீண்டும் வந்தேறுகின்ற கன்மங்களையுடைத்தாம். இன்பந்தருவன வற்றில் விருப்பும், துன்பந்தருவனவற்றில் வெறுப்புமுடைய தாகும். இன்னும் இவ்வான்மாவினிலக்கணம், வகைவிரிகளாற் பல திறப்படும். அவை விரிந்த சைவநூல்களிற் காண்க.

## (எ) கடமையின் றன்மை.

இனி, கடமையாவது இன்னதெனச் சிறிது கூறுவேன். இவ்வுலகத்து அறிவுள்ள ஒவ்வொருவரும், நாம் செய்யவேண்டியவையிவை யிவையென நூன்முகமாகவும், பெரியார் முகமாகவுமுணர்ந்து பிரதிப் பிரயோசனத்தைப் பற்றிச் சிந்தியாமல் மேற் கொள்ளுங் காரியங்களுள் இன்றியமையாது செய்யத் தக்கவை யெவையோ அவை கடமை யெனப்படும். நன்மாணாக்கனொருவன் ஆசிரியனொறுத்தல் கருதி வெறுப் புறாது அவனாணை வழி நின்று கற்றுவருதலும் இக்கடமையேயாகும். போர்வீரனொருவன் போர் முனையிற் சென்றவுடன் தனக்கு வரும் வெற்றி கருதி முற்படலும், தோல்வி கருதிப் பிற்படலுஞ் செய்யாது நிலை நின்று பொருதலும் அவன் கடமையாகும். அற நூல்களில் நித்தியகருமானுட்டானங்களைப் பற்றிக்கூறி, அவற்றைச் செய்தலால் வரும் பயனையும் விரித்துப்பின், இப்பயன்களையாராய்ந்தறிந்தே செய்தல வேண்டுமென்று எவரும் கருதல் கூடாதெனவும், பிரதிதினமுஞ் செய்யவேண்டிய கன்மங்களைப் பயன் விசாரியாதே செய்து தீரவேண்டுமெனவும், அங்ஙனஞ் செய்தல் ஒவ்வொருவனுக்குங் கடமையாமெனவுங் கூறுதலுமீண்டுக் கருதற்பாலது. அறிவுவலிபடைத்தார் பயனை விசாரித்தன் மிக நன்றே. அஃதியலாதாயின், விசாரித்தறியும் வரை கன்மங்களைச்

செய்யாதொழிதல் தவறென்பதே யீண்டுத்துணியற்பாலது. பயன், விசாரித்தலின்றிச் செய்யினும் செய்தாரைச் சார்தலொருதலை. வரையாது கொடுக்கும் வள்ளன்மையுடையோர், இவற்கு இன்னது செய்தல் வேண்டும், இதற்கின்னது செய்தல் வேண்டும் என்னும் நியதியின்றி நேர்ந்த நேர்ந்தபடி கொடுத்ததற்குக் காரணம் அவருள்ளத்திற் பதிந்து கிடக்குங் கொடைக் கடமையேயாகும். இது நோக்கியே, அவர் கொடைமடம் பட்டோரென்று கூறப்படுவர். முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையும் வேண்டாதனவாகவும், அப்பொருள்களினியற்கைத் தளர் நிலையைக் கண்டவுடன் மனநெகிழ்ந்து இரக்கமுற்று அவற்றிற்குப் பேரிடையூறுவந்ததாகக் கருதிப் பாரி முதலியோர் இவையில்லாத் தேரும் போர்வையுமீந்தனரே. இவ்வகை பயன் குறித்ததாமா? அவர் தமக்கு இயற்கையினமைந்து கிடக்குந் தண்ணளியோடு கூடிய கொடைக்கடமையேயன்றி வேறென் சொல்வது? முல்லைக்கொடி, படர்கொம்பின்றித் தளருமேல், தன் ஏவலாளரைக் கொண்டு தக்கதொருகொழு கொம்பை நிறுத்தல் கூடாதா? அக்கொழு கொம்பினும் இத்தேரினு லக்கொடிக்குக் கிடைத்தவிசேட நலம் யாதுளது? அங்ஙனமாகவும் தேரை யீந்ததற்குக் காரணம், பாரிவள்ளல் தேரேறி வருங்காற்கொடியின்றளர் நிலையைக் கண்டதும் தனது இயற்கைத் தண்ணளியால் இன்னது செயற்பாலதென்றுணரும் அத்துணையுந் தாழ்க்கமனமின்றி அக்கணமே தேரைநிறுவினர் என்பதே. இதனானன்றே, "கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்று நம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவ்வள்ளலின் கொடைத்திறத்தைப்பாராட்டி யருளினர்கள். நம் மக்களொவ்வொருவம் தந்தேயம், மொழி, சமயமுதலியவற்றைப் பேணமுற் படலும் தத்தங்கடமையாகும். இக்கடமை யுலகியற் கடமை சமயக்கடமை யென இருவகைப்படும் அவற்றுளீண்டுக் கூறப்பட்டன சில வுலகியற்கடமைகளாம். இன்னும் இதுசம்பந்தமாகக் கூறப்புகின் மிகவிரியுமாதலின், எடுத்துக்கொண்ட விடயத்திற்கியையுமாறு நம்சமயக் கடவுளாகிய சிவபிரான்மாட்டு நாம் செய்ய வேண்டியவைகளை யீங்குக்கூறுவேன்.

## (அ) சிவபிரானிடத்துச் செய்யவேண்டிய கடமைகள்.

சைவர்களாகிய நாமெல்லாம் நம்சமயக்கடவுளாகிய சிவபிரானை யுண்மையன்போடு வழிபடுதல் வேண்டும். அங்ஙனம் வழிபடுங்காலி

தர தெய்வங்களைப்பழித்தல் கூடாது. நந்தெய்வத்தையே போற்றுவேமாக. ஆயின், ஒருசாரார். எல்லாத்தெய்வங்களும் ஒன்றேயாதலின், அத்தெய்வங்களெல்லாவற்றையும் சமமாகக்கருதியன்பு செய்தல் வேண்டுமென்பார். அன்னார்கூற்று மரபு பிழைபட்டதொன்றாதலின், பொருந்தாமை காட்டுதும். ஒவ்வொரு சமயத்தாருந் தத்தஞ் சமயக்கடவுளைச்சிறப்பு வகையானும் பிறசமயக்கடவுளைப்பொதுவகையானும் அன்பு செய்யலாமன்றிச் சமநிலையாக்கோடல் பக்தியின் இலக்கணமன்றாம். தெய்வங்களெல்லாம் உண்மைநிலையில் முடிவில் ஒன்றேயெனினும் அவ்வுண்மை தத்துவஞானிகளுக்கன்றி மற்றையோர்க் குணர்வரிதாம். சாமாந்யர்கள் அந்நிலையைப்பற்றிப் பேசல் பேச்சளவேயன்றி யநுபவவளவிற் கோடலரிது. எவ்விஷயமும் அநுபவத்தினன்றிப் பேச்சளவினொழிதல் பயனின்றாம். இன்ன இன்ன வொழுக்கங்கள் உத்தமமென்று பேசிவிட்டு அவற்றைக்கடைப் பிடிக்காவிடின், அப்பேச்சாற் பயனென்னை? "சொல்லுதல்யார்க்குமெளிய வரியவாம், சொல்லிய வண்ணஞ் செயல்" என்பதும் ஈண்டுகருதற்பாலது. சிறப்பென்பது ஓரிடத்தன்றிப் பலவிடத்துஞ் சேறலாகாது. பல்லிடத்துஞ்சேறல் சாமாநியபக்தியேயாகும். ஒரு பெண்மகள் தன்னைக்கைப்பிடித்த காதலனிடத்துச் செய்யும் அன்புக்கும் தன்சோதரர் சுற்றத்தாரிடத்துச் செய்யும் அன்புக்கும் பேதமுண்டன்றே? முன்னையது விசேட வன்பும் பின்னையது சாமாநிய வன்புமாம். விசேடவன்பை வேறோரிடத்துச்செய்யின், வியபிசரித்தற் குற்றம் வருதலோடு விசேடவிலக்கணமும் பிழைபடும். சாமாநியவன்பை யுரியசோதரரிடத்துப்போன் மற்றையோரிடத்துஞ் செய்யலாம். இதனால் வருங்குற்றம் யாதுமின்றாம். அவ்வாறே நமதுசமயக்கடவுளிடத்துச் செய்யும்பக்தி விசேஷமும், ஏனைத்தேவர்களிடத்துச் செய்யும் பக்தி சாமாநியமுமாம். ஆனால் அப்பெண்மகள் தன்னுயிர்க் காதலனைப்பாராட்டி யேனைச்சோதரர் முதலியோரையு மிகழாது உபசரித்தல் போல நாமும் நச்சமயத் தெய்வத்தைப் பாராட்டுதலோடு மற்றைத் தேவர்களையு மிகழாது அவரவர்க் கேற்றவாறு உபசரித்துப் போற்றுதல் கடனாம். இவ்வாறு தத்தஞ்சமயத் தெய்வங்களிடத்து வைக்கும் விசேட வன்பே நல்லின்பந்துய்ப் பித்தற்குரியதாகும்.

(இன்னும்வரும்)

இங்ஙனம்,

மு. கதிரேசன்,

மகிபாலன்பட்டி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஒரு உபநிடத மந்திரம்.

"ஆத்மானம் அரணிம் கிருத்வாப்ரணவஞ்சஉத்தராரணிம்
ஞான நிர்மதனுப் பியாஸாத்பாசம்த கதிபண்டித:"

"ஆன்மாவைக் கீழ் அரணியாயும், பிரணவத்தை மேல் அரணியாகவும் ஞானத்தினல் எவன் கடைகின்றனே அவன் பாசத்தைச் சுட்ட பண்டிதனுவான்." (கைவல்ய உபநிடதம்:)

நம் தமிழ் சித்தாந்த தீபிகை முதற் றெகுதியுள் இருமொழியினும் வல்லுனராகிய ஸ்ரீமத் காசிவாசி செந்திநாதய்யரவர்களின் கைவல்ய உபநிடதமொழி பெயர்ப்பும், விருத்தியும் பதிக்கப்பட்டுள்ளது. அவர் விசேட உரையில் இவ்வுபநிடதத்திற் காணப்படும் மந்திரங்களுக்கும் மற்ற உபநிடதங்களிற் காணப்படும் இயைபுகளைக்காட்டி, உப்பிருங்கண வசனங்களையும் புகட்டிச் சித்தாந்த உண்மைகளை நாட்டியிருக்கின்றனர்.

இவ்வுபநிடதத்தில் காணப்படும் ஒருமந்திரத்தையே ஈங்கெடுத்துநாம் ஆராயப்புகுந்தது.

இவ்வுபநிடதத்தைச் சிலர் சமய சம்பந்தமான தென்றும், நவீனமென்றும் பகருவர். இதை நாம் மறுக்கின்றோம். எனினும் இது ஸ்ரீமத் நீலகண்ட சிவாசாரியருக்கும், ஸ்ரீமத் சங்கராருக்கும், ஸ்ரீமத் பாகவத புராணத்துக்கும் முற்பட்டதாகச் சொல்வோம். ஸ்ரீ சங்கரர் இதனைப் பஞ்சருத்ரங்களில் ஒன்றாகக்கொண்டுவிருத்தி செய்திருக்கின்றார். பாகவத வசன வறுமாறு.

"கைவல்யம், சுவேதாசுவதரம், அதர்வசிரஸ், அதர்வசிகை, காலாக்னிருத்ரம் ஆகிய இவ்வைந்து உபநிடதங்களும் உன் ஐந்து முகங்கள். சிவனெனும் உன் பெயர் உயர் மெய்ப்பொருளாகும்.

மேல், நாம் மேற்கோளாகக்காட்டிய இம்மந்திரம் சுவேதாசுவதர உபநிடதம் 1-ம் அ. 14. மந்திரத்தோடு இயைபுடைத்தாகும். அது வருமாறு.

"ஸ்வதேக மரணிம்கிருத்வா ப்ரணவஞ் தோத்தராரணிம்
த்யான நிர்மதனும் யாசாத்தேவம் பஸ்யேணிகூடவத்."

"என்தேகத்தைக் கீழ்கடைக் கோலாகவும், பிரணவத்தை மேற் கோலாகவும் தியானத்தினுற்கடைந்து, உள்ளேஒளித்திருக்கும் தேவனைப் பார்ப்பேன்" (I, 14).

இம்மந்திரங்களை இதற்குமுன்னும் பின்னுமுள்ள மந்திரங்களுடன் கோத்துப்பார்க்கும் போது சில பூர்வபட்சிகளுடைய மதம் அவலப்பட்டொழிவதைக் காண்க. அவர் கூற்றும், ஈஸ்வரன் (சகுணப் பிரமம்) பிறப்பிறப்பென்னும் வலையிற்சிக்குண் டுழல்வதும், விறகிற் றீயைப்போலவும், பாலில் நெய்போலவும், மழுங்கிக்கிடந்த தன்சொரூபம் விளங்கும்பொருட்டே என்பது.

"அப்பிற் கரைந்த உப்பைப்போலவும், (சாந்தோக்ய உபநிடதம் VI. 14) கடையுமுன் கட்டையிற் றீயைப்போலவும், கடையுமப்பாலிற் படுவெண்ணெயைப் போலவும், (சுவேதாசு-உபநி I. 15; IV. 16) பிரமன் ஒவ்வொரு பிராணியின் ஆத்மாவாக மறைந்து நிற்கின்றான் (பெசண்டு அம்மையாரின் இந்துமதம் ப-16.) இவ்விதம் மயங்கியதின் காரணமும் அவ்வம்மையார், தாம்போனவழி அம்மந்திரங்களை உதகரித்துக் கொண்டதேயாம். அம்மந்திரங்களையும் உள்ளபடி உணரில் இம்மயக்கத்துக்கு இடந்தந்ததில்லை யென்க.

I. 11-மந்திரம்.

"தேவனை அறிவதனல், சர்வபாசங்களும், துக்கமும் பிறப்பிறப்பும் அறும். அவனைத் தியானிக்கவும், உடலைக்கீழேவிட்டு, விஸ்வைஸ்வரியத்தோடு கேவல ஆப்தகாமனுகின்றான்."

இப்பதிஞானமும் உயிருக்கு எப்படி உறுதியாகுமெனின், அடுத்த மந்திரம் அறைகின்றது.

"இது என்றும் ஆன்மாவில் உறுதியாய் இருப்பதாய் அறிய வேண்டும். இதைத்தவிர வேறொன்றும் உறுதியாய் அறியவேண்டுவதின்று. உண்பவன், உண்ணப்படுவது இவைகளைப் பிரேரிப்பவன்

என்பவற்றை உணர்ந்தானே அவன் எல்லா முணர்ந்தவனாகின்றான். இதுதான் திரிவித பிரமம்.'' (I. 12.)

ஆன்றோர்வாக்கில் அவநம்பிக்கை உடையவர்கள், நாம்கடவுளைப் பார்க்கவில்லையே. எப்படி நம் ஆன்மாவில் கடவுள் மறைந்திருக்கின்றார் என்று கேட்பின், அதற்கு மறுமொழி அடுத்த மந்திரம் தருகின்றது.

''வக்நேர்ய தாயோனிகதஸ்ய மூர்த்திர்நத்திரியஷ்யதே-நைவசலிங்கநாஸ, பூயஏவெந்தனயோனிக்ரிஷ்யஸ்த்வோபயம் வைப்ரணவேதேகே*''

''எப்படி யோனிக்குள்ளிருக்கும் போது, தீயின் உருவம் விளங்கவில்லையோ, எனினும் அதன் இலிங்கம் எப்படி நசிக்கவில்லையோ, அந்த இலிங்கமும், இருகட்டைகளைக் கடையவும் விளங்குமோ, அது போல், இவ்விரண்டும் தேகத்தில் பிரணவசக்தியால் காணப்படும்'' (I. 13)

இதனை, மேற்காட்டியிருக்கும் 14-வது மந்திரம் விரித்துப்பேசியது. அடுத்த மந்திரத்தில் அநேக உதாரணங்களை அடுக்கியிருக்கின்றது.

''எள்ளில் எண்ணெய்போலவும், ததியில் வெண்ணெய்போலவும், கட்டையில் தீயைப்போலவும், ஆன்மாவில் (சீவன்) ஆன்மாவை (பரமான்மா) எவன் சத்தியத்தாலும் தவத்தாலும் தேடுகின்றானோ, அவன் பார்க்கக்கூடும்'' (I. 15)

அடுத்தமந்திரமும்,

---

* இம்மந்திரத்தில் யோனி, லிங்கம் என்னும் பதங்கள் வருவதைக் கவனிக்கற்பாலது. யோனிஎன்னும் பதத்துக்குக் குழி என்னும் பொருள். ஈங்குக் குறிக்கப்படும் கீழ்கட்டைக்குப் பேர். வேதங்களில் ஹோமாக்கினிவளர்க்கும்குழிக்கு, யோனியென்றே பேர்வழங்கப்படுகிறது. அந்த யோனியிலிருந்த தீயை என்னிருதய குகையில் வைத்தேன் என மந்திரங்களில் பேசுகிறது. அக்குகையில் மேலோங்கி வளரும் திக்குலிங்க மென்று இம்மந்திரத்திலும் பேசப்படுகிறது. இந்த அகண்டாகாரசோதியையே இலிங்கபுராணத்தில் ஓங்காரவடிவாக அமர்ந்த இலிங்கமாகப் பேசப்படுகிறது. ''அக்கினியே ருத்ரன'' என இருக்குவேதம் பேசிய படியால், அவ்விலிங்கமும் ருத்ரனுக்குப் பேரும் அடையாளமுமாயிற்று.

"பாலில் நெய்போலும், அப்பரமாத்மா எங்கும் வியாபித்திருக்கின்றான், அவனை ஆத்மாவில் உணரவேண்டும்-அந்தப்பரமன் பரம உபநிடதங்களின் விஷயம். பரம உபநிடதங்களின் விஷயம்'' (I. 16)

பூர்வபட்சியார் குறித்துள்ள 4-ம் அ-16-ம் மந்திரத்தையும் காட்டுவோம்.

"பூதங்கள் தோறும் மறைந்து நின்று, எல்லாவற்றையும் காப்போனுவன். எல்லா மகிமையும் பொருந்திய மகரிஷிகள் பரமனைக் காண்கிறார்கள். அப்படி இவ்னைக் காணவும், இறப்பு என்னும் பாசத்தை (கயிற்றை) அறுக்கிறார்கள்." (N. 15)

"நெய்யினும் பரமாயும் நுண்ணியதாயும் எல்லா பூதங்களிலும் கலந்து நிற்கும் சிவபெருமானை ஏகன் அநேகன் ஆகிஎல்லாவற்றினுள்ளும் கலந்திருக்கும் அத்தேவனை உணரின் ஒருவன் எல்லா பாசங்களினின்றும் விடுபடுகின்றான்'' (IV. 16)

இம்மந்திரங்களைத் தொடுத்துப் படிக்கும் யாவரும், பெஸண்டு அம்மையாரின் கட்சிபெருமையுடைய தன்றெனக் காணலாம். இம்மந்திரங்களில் சீவாத்மா, பரமாத்மாவினுடைய தன்மைகளையும், நுண்ணியதினும் நுண்ணியதாகிய சிவத்தை அறியும் ஆற்றல் இல்லாத உயிர், நெஞ்சுநெக்குருகி அயரா அன்பு பூரித்து உண்மையோடும், பிரவணத்தோடும் சிந்திப்பானுயின் எவ்விதம், எல்லாவற்றும் கலந்து மறைந்து கிடக்கும் அப்பரத்தைக் காணவும், சிவசூரியப்பிரகாசம் எழுந்து மாயையாகிய இருள் இரிந்து தன்கட்டுகள் எல்லாம் விடுமாறும் துலக்கியுள்ளது. நெய்பாலில் கலந்திருந்த போதிலும், வெண்மையாக மோரில் மிதந்தபோதிலும், அதன் தன்மை குன்றவும் அல்லது அதிகரிக்கவுமில்லை மறைந்திருந்து வெளிவந்ததனுல்,' அந்நெய்க்கு ஒரு பயனுமில்லை, இருநிலையிலும் நெய் நெய்தான். ஆயின் வெண்ணெய்யாக முன்நின்றதனுல் பின் யாவருக்குப் பலன் எனின், நுகருவானுக்கே. பாலைக்குடிக்கும்போது அதில் உள்ள நெய்யைச் சுவைப்பதினும், வெண்ணெய்க்காகத் திரண்டதை உண்பது எவ்வளவு சிறப்பு எனக்காணவும், நுண்ணியமதியை உடையார் பரமேஸ்வரன், மறைந்திருந்து வெளிவந்தால் அவனுக்கு ஏதோ பிரயோசனம் உளதென

என்றும் மதியார். ஆயினும், பிறவிப்பிணியில் உழலும் மாந்தர்க்கு, அவ்வமிர்தனுற் பயனுண்டு. இன்னுமொரு சாரார் முக்தியில் பாசட்சயம் என்றே நிகழ்வதாகவும். உயிர் ஞானமற்றுத் தற்சொரூப மெய்தி, அநுபூதியின்றித் தானுகின்றது என்பார்கள். உண்மையில், பாசவீக்கமாகும் அந்தக்ஷணமே, தற்சொரூப மடைவதும், சிவன் கழல் எய்தி அப்பரமாநந்தத்தில் முழுகுவதும் உண்டாகின்றது. ஆகையால் அந்த க்ஷணம் தன்னையும் தன் இறைவனையுமாகிய இரண்டு *பேற்றையும் பெறுகிறுன்.

"வேதாகமேதம் புருஷம் மகிந்தம் ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் தமேவிதித்வாதி மிருத்யுமேதி நாந்ய: பந்தா வித்யதேயனுய"

"இருளுக்கு அப்பால் ஒளிரும் சூரியனைப்போன்ற மகாபுருஷனைப்பார்க்கின்றேன். அவன் ஒருவினையே உணர இறப்பைத்தவிர்க்கின்றுன். வேறுவழியில்லை" (III. 8 சுவேதா-உபநி)

பலன் தேடுகிறவன் எவன், தேடும்பலமும் எது, தேடும் வழி எது என்பவைகளைப்பற்றி எவ்வித ஐயம் வராமல் தெள்ளிதாய்க் கூறும் இம்மந்திரத்தை விடவேறு கிடைப்பதரிது.

எனினும், தேடுவோனுடைய முயற்சியாலேயே இது முடியுமோவெனின், அது முடியாது.

"அணோரணியான் மகதோமகியானுத் மகுஹாயாம்
[நிகிதோஸ்ய ஜந்தோ:
தமக்ருதம் பச்யதி வீதசோகோதாது: ப்ரஸாதானமகிமானமீசம்.

---

* மேலேகாட்டியுள்ள 13-ம் மந்திரத்தில் காணப்படும் (இரண்டு) என்பது இவ்விரண்டாகிய சீவனும் சிவனுமே. மீட் (G. R. S. Mead) மொழிபெயர்ப் பாசிரியர் இவ்விரண்டும் நிர்குணப் பிரமமெனவும் சகுணப்பிரமமெனவும் பிழைபடக்கூறுகின்றுர். மேலும் 14-ம் மந்திரத்தில் காணப்படும் தேவன், சகுணப்பிரமமெனவும், 15-16-ல் கண்ட ஆத்மா நிர்குணப் பிரமமெனவும் கூறுகின்றுர். அறிஞர் அவ்விதம் வேற்றுமை காணுரென்பதுதிண்ணம்.

சிறிதிற்சிறிதாயும் பெரிதிற் பெரிதாயும் இந்த உயிரின் இருதயக்குகையின் கண்ணே அவ்வாத்மா (பரமாத்மா) இருப்பது. அதனை அவன், ஆசையற்று, துக்கநீங்கிப் பார்க்கின்றான், மகிமை பொருந்திய ஈசனுடைய பிரஸாதத்தினால்'' (ச. உ. III. 20) கட. உ. II. 20

"அப்பரமாத்மை, வேதத்தினாலும், அறிவாலும் கேள்வியாலும் அடையமுடியா. எவனை அவ்வீசன் எடுக்கின்றானோ அவன் அவனையடைபவன். அவன் (ஈசன்) அவன் (உயிர்) தனுவைத் தன்னதாக்கிக் கொள்கின்றான். (கட. 2. II. 23)

இவ்விரண்டு மந்திரங்களின் கருத்து. திருவாசகத்தின் ஓர்திவ்ய சூக்தியிலமைந்து கிடந்தது.

"இன்றெனக்கருளி இருள்கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே
நீயலாற் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த்தேய்ந்து தேய்ந்தொன்றாம்
திருப்பெருந்துறை யுறைசிவனே
ஒன்று நீயல்லை யன்றியொன்றில்லை
யாருன்னை யறியகிற்பாரே."

இப்பாசுரத்தை நாமொடுங்கிய உள்ளத்தோடும் சிந்திப்பாம். ஒவ்வொரு பிறவிக்குருடனும் தன்கண்பெறப் பேராசைப்படுகின்றான். அவன் விரும்பிய வண்ணம் கண்பெற்றானாயினும் அவன் கண் இருள் நீங்குமோ? சிவசூரியன் பேரருள் புரிந்து அவனுக்குப் பிரசன்னமாகாவிடில் அது எப்போதும் முடியாதென்றே சொல்லலாம். அச்சூரியனாலும், அவன் குருட்டுத்தன்மையிருக்கும் வரை ஒருபயனுமின்று ஆகவே ஒருவன் இருவினை யொப்படைந்து மலபரிபாகப் பெற்ற அன்றே தன்னுள்ளிருவரை மறைந்து நின்ற பேரருளாளனும் அவனுக்குத்தரிசனமாவன் - இவ்விதபாசவீக்கத்தில் இன்பம்தலைப்படுமோ என முன்னும் கேட்டிருக்கின்றார்கள் இன்னும் கேட்பார்கள். நம் மெய்கண்டநாதனும் இவ்வின்பத்தின் அபரிமிதத்தை, கண் பெற்றாருடைய இன்பத்தினின்றும் உய்த்துணரும்படி சொல்லுகின்றார்.

அதில் இன்பம் உண்டோ இல்லையோ? என்னும் குருடனுக்கு, மறைந்தும், இப்போதே கண்பெற்றபோது அவனுக்குப் புலப்பட்டுமுள்ள சூரியனுக்கு என்னோவேற்றுமை? என்னோ இழிவு ஏற்றம்?

தந்ததுன்றன்னைக் கொண்டதென்றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம் ஒன்றில்லா வாநந்தம்பெற்றேன்
இயாது நீ பெற்ற தொன்றென்பால்
சிந்தையேகோயில் கொண்ட வெம்பெருமான்
திருப்பெருந்துறை யுறைசிவனே
எந்தையே ஈசா உடலிடங்கொண்டாய்
யானிதற்கிலனோர் கைம்மாறே.

நாம் தேடும் பொருள் நம்முடைய ஆன்மாவோ வென்பதின் ஐயம் நீக்குதற் பொருட்டே நாம் மேற்கோளாகக் கொண்ட சுருதியில், "ஆத்மானம் அரணிம்கிருத்வா" என்றமையால், சீவான்மாவையே கீழ்கடைக் கோலாகக் கொண்டிருக்கின்றது. சுவேதாதர சுருதி உடலை கீழ் அரணியாகக் கொண்டது. அப்பொழுது அடையும் பொருள் தன் ஆன்மாவும் ஆன்மநாயகனுமாகிய இரண்டு என ஏற்பட்டது. சாதாரணமாக, என் உள்ளம், என் உடல், என் கண், என் உயிர், என் சிந்தை என்பன வெல்லாம், ஒரே பொருளைத்தந்து, உயிரையும் அதன் கிழிட்ட கரணங்களையும் குறிப்பிக்கும். என் சிந்தையில் உள்ளான், என் கண்ணிலுள்ளான், என்னிலுள்ளான், என்னுடலிடங்கொண்டான் என்பன இறைவனையே குறிக்கும்.

ஜே-எம்-நல்லசாமி பிள்ளை. B A, B, L.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஆலய வழிபாடு.

"ஆலயந்தொழுவது சாலவுநன்று" என்று நம் மூதாட்டியாராகிய ஒளவையார் அருளிச்செய்த அரியவாக்கியத்தின் கருத்தைச் சற்று ஆராய்வோம்.

சகல ஆன்மாக்களுக்கும் உறுதியைத் தரக்கூடியவைகள் புகழும், புண்ணியமும், ஞானமுமாம். இவைகள் மூன்றும் பயன்படுதல் இம்மையிலும், மறுமையிலும், வீட்டிலுமாம். இம்மையில் அனுபவிக்கக்கூடியது புகழ் ஒன்றேயாம். இப்புகழுக்கேதுவாகிய செலவம் மறுமைக்குச்செல்லாது; ஆகையால் மறுமைக்கு வேண்டுவது புண்ணியமொன்றேயாம். அப்புண்ணியம் வீட்டுநெறிக் கமையாது; ஆனதுபற்றி வீட்டுநெறிக்கு வேண்டுவது ஞானமொன்றேயாம்.

மேல்விவரித்த புகழும், புண்ணியமும், ஞானமும் ஆன்மாக்கள் சுதந்திரமாக அடையக்கூடியவைகள் அல்ல "அவனன்றி ஓரணுவுமசையாது" அவற்றைக்கூட்டுவது அனந்தகல்யாண குணநிதியாய் விளங்கும் சர்வ சுதந்தரனாகிய இறைவனாகும்.

"அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையில்
நீக்க மின்றி நிற்கு மன்றே."

அதாவது அவனவளதுவாய்க் காணப்படும் பிரபஞ்சமேயாய், தன்னுடைய வாணையினால் ஆன்மாக்கள் முன்புசெய்த பாவபுண்ணியங்களுக் கீடாக இறந்தும் பிறந்தும் வர, அவ்வாணையில் நீக்கமின்றி நிறைந்து நிற்பன்.

அவ்விறைவனே இந்தனத்தின் எரி, பாலில் நெய், பழத்தில் இரதம், எள்ளின் கண் எண்ணெய்போல் எங்குமுளான். அங்ஙனம்

சர்வவியாபியா யுள்ளவனாயினும், தாதமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம், என்கிற சரியை, கிரியை, யோக ஞானங்களினின்றும் வழிபடுவோர்க்கு, "உருக்காண வொண்ணாதபால் முலைப்பால்விம்மி ஒழுகுவதுபோல் வெளிப்பட்டருளுவ னன்பர்க்கே" என்றபடி அருள் செய்யக்கூடியவனாகயிருக்கின்றான். பசுவினது சரீரமுற்றும் வியாபகமாயிருக்கிற பாலைத் தன்னை நினைத்துக் கூவும் கன்றைத்தானும் நினைந்துருகி முலைக்காம்பின் வழியே கன்றுக்கு ஊட்டுதல் போல, இறைவன் எங்கும் நிறைந்துள்ளானாயினும்தன்னை அன்பால் வழிபடுவார்க்குச் சிவலிங்கமூர்த்தியி னின்றும்வெளிப்பட்டுவேண்டியாங்கருள்புரிவனென்பது பெறப்பட்டது. இதற்குச் சான்று சைவ சித்தாந்த சமயாசாரியர்களே.

எப்படியெனில் பசுவை நினைத்து மனமுருகிக்கூவும் கன்றைப் போலும் தேவார திருவாசகங்களால் பெருமானை யழைக்கப் பெருமான் அக்கணமே வேண்டியாங்கு வெளிப்பட்டருளுவதேயாம். அவ்வாறருளியது தாம்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் திருத்தலங்கள் தோறுமன்றோ. !

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினற்கோர்

வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே". என்றும் நம்முன்னோர் கூறியுள்ளார்கள். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மகிமைகள் அமைக்கப்பெற்ற திருத்தலங்களின் சிலவற்றையும் ஆங்கு வழிபட்டு முத்திபெற்றவர்களின் சரித்திரத்தையும் இங்கு எழுதுவாம்.

திருக்கோயில் (சிதம்பரம்) :—முனிசிரேஷ்டராகிய மத்தியந்தினர் புத்திரப்பேறுவேண்டிச் சிவபிரானைநோக்கி அநேகநாட்கள் அரிய தவஞ்செய்தனர். பரமேஸ்வரன் அவருடைய தவத்துக்கிரங்கி விருஷபாரூடராய்த் தரிசனந்தந்து யாதுவேண்டுமென்ன முனிவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவனாயும் தேவரீரிடத்திற் சிறந்தபக்தி யுடையவனாயும் சதாதேவரீரது பூஜையையே விரும்புகின்றவனாயும் சகல தர்மங்களை யறிந்தொழுகுவானாயு முள்ள ஓர் புத்திரனை நல்கவேண்டுமென்ன, பகவான் அவ்வாறே ஆகுகவென் றாசீர்வதித்துத் திருவுருக்கரந்தனன். பரமேஸ்வரர் அருளியபடியே அம்முனிவருக்கு ஓர் புத்திரன் பிறந்தான். முனிவர் ஆனந்தமடைந்து அக்குழந்தைக்குச்

செய்பவேண்டிய சடங்குகளைத்தவறாமற்செய்து தகுந்தவயதில்முறையாக உபநயனம், வேதசாஸ்திர இதிகாச புராணங்கள் யாவுங்கற்பித்துக் குமாரனை நோக்கி இனிநீ வேண்டுவது யாதென்ன? அச்சிறுவன் யானுணர்ந்த நூல்களில் தவமே எல்லாவற்றையுங் கொடுக்குமென்று சொல்லக்கண்டேன். அத்தலங்களில் மேலானதவமெதுவோ அதை அறிவிக்க வேண்டுமென்ன, மத்தியந்த முனிவர் குமாரனை நோக்கி இவ்விளமையிலேயே தவத்தை நீ விரும்பியபடியால் தெரிவிக்கின்றேன். தவம் இருவகைப்படும். போகத்தைக்கொடுப்பதொன்று. முத்தியைக்கொடுப்பதொன்று. போகத்தைக்கொடுக்குந் தவம் சாந்த்ராயண முதலிய விரதங்கள், அஸ்வமேத முதலிய யாகங்களாம். முத்தியைக்கொடுக்குந்தவம் சிவார்ச்சனையாமென்று கூறவும் பழமுனிவர் சிவார்ச்சனை செய்தற்குரியஇடம்யாதென்ன, இப்பரதகண்டத்தில் தில்லையென்னும் பெயரையுடைய வனமொன்றிருக்கின்றது. அதில் சிவசொரூபமான சிவகங்கையென்னும் தீர்த்தமுள்ளது. அத்தீர்த்தத்திற்கு தெற்கே சுயம்பு மூர்த்தமாகிய திருமூலநாதர் என்னும் சிவலிங்கமொன்றிருக்கின்றது. அவ்விடம் நீ சென்று நாள்தோறும் சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து திருமூலநாதரைத் தரிசித்து ஸ்ரீபஞ்சாக்கரத்தை ஜபம்செய்துகொண்டிருப்பையாயின் அச்சாம்பமூர்த்தி கடாட்சத்தினால் அதிசீக்கிரத்தில் உன் அபீஷ்டம் நிறைவேறி முடிவில் சாயுச்சியபதத்தையுமடைவாய் என்றனர்.

பழமுனிவர் தந்தையிடம் விடைபெற்று, தில்லைவனம் புகுந்து, ஆங்கு தவஞ்செய்து கொண்டிருந்த முனிவர்களைக்கண்டு ஆனந்தபரவசமடைந்து சிவகங்கையில் மூழ்கி நானாவித பரிமள புஷ்பங்களால் திருமூலநாதரை யருச்சித்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தைச் செபித்துக்கொண்டிருந்தார். ஓர் நாள் ஆரணியத்துட்சென்று புட்பங்கொணர்ந்து திருமூலநாதரைப் பூஜைசெய்யும்போது, அப்புட்பங்களில் சில பழுதாயிருக்கக்கண்டு மனங்கசிந்துருகிச் சிவத்தியானஞ்செய்துகொண்டிருக்கும்போது பரமேஸ்வரன் பிரசன்னமாகி யாதுவேண்டுமென்ன, மழமுனிவர் ஆனந்தபரவசமடைந்து "ஆகமவிதிப்படி சூர்யோதயத்திற்கு முன் அர்ச்சித்தற்குரிய மலர்களைக்கொய்வதற்குப் பனியினால் மரங்களிலேறக் கூடாமையாயிருக்கிறது. உதயமானபிறகு புஷ்பங்கள் வண்டுகளால் கடிக்கப்பட்டுப் பரிமளம் சூனியமாயிருக்கின்றது ஆகையால்அடியேனுக்குக் கால்களுங்கைகளும் புலிக்கால்களும்புலிக்

கைகளுமாகவும் இருப்பொழுதில் புழுவெட்டு முதலியகுற்றமுள்ள மலர்களைநீக்கி நல்ல மலர்களைக் கொய்வதற்கு அக்கைகால்களினகங்களேகண்களாகவும், மற்றஅங்கங்களெல்லாம் மானுடஅங்கங்களாகவும் இருக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.பரமேஸ்வரன் மிகவும் சந்தோஷித்து அவர் வேண்டியபடியே அநுக்கிரகஞ்செய்து மறைந்தனர், கணநாதர்களெல்லாம் மழமுனிவரை வியாக்ரபாதரேன்று வாழ்த்தினர். வியாக்ரபாதர் களிப்படைந்து பரிமள நீங்காத மலர்களைக் கொய்து பகவானை யர்ச்சித்து வந்தார்.

ஒருநாள் வியாக்ரபாதர் சிவயோகத்திலிருக்கையில் தாருகவன ரிஷிகளுக்குக் காட்சிதந்த நடனகோலம் தமதறிவிற்சிறிது தோன்றியது; தோன்றவும் மிகவும் மனம்வருந்தி 'அந்தோ! நமது பிதா திருமூலத்தானமாகிய இவ்விடத்தில் பரமேஸ்வரனை அருச்சனை செய்யச்சொன்னவர் தாருகாவனத்தில் அருச்சனை செய்ய விதித்திருப்பராயின், நான் அந்த நடனகோலத்தைதக கண்டிருப்பேனல்லவா' என்று நினைத்தனர். பரமேஸ்வரன்கருணை கூர்ந்து இச்சிதம்பரத்தின் கண் நீ அதனைத்தரிசிக்கலாமென்று அவரறிவில் விளக்கினார். அவ்வளவில் வியாக்ரபாதர் மகிழ்ந்திருந்தனர்.

இதுநிற்க, திருப்பாற்கடலில் ஆதிசேஷசயனத்தில் திருமால் யோகநித்திரை செய்து கொண்டிருக்கையில் ஒருநாள் அவருக்குத் தேகம் நிஷ்காரணமாய் அசைவுற்றது. ஆதிசேஷன் ஆச்சரியமடைந்து அப்படி அசைந்ததற்குக் காரணம் என்னவென்று மிகுந்த பயபக்தியுடன் விஷ்ணுவை வினவினன்.விஷ்ணு அது மிகவும் இரகசியமானது ஆயினும் நீ என்னுடைய அந்தரங்க பக்தனாகையால் உனக்கு விளம்புகிறேன் கேள் நான் சிவதரிசனைக்காக கைலாயத்திற்குப் போயிருந்தபோது பரமேஸ்வரன் தாருகவனத்து ரிஷிகளின் ஆணவமலத்தையொழிக்க வேண்டியும் அவர்களுடைய தவநிலையைச்சோதிப்பதற்காகவும் தான் பிக்ஷாடன வேடந்தரித்து என்னை மோகினிவடிவெடுத்து வரும்படிக் கட்டளையிட்டனர். அவ்வாறேநான் மோகினியாகித்தாருகாவனத்திற்கு பிக்ஷாடனவேடங்கொண்ட சிவபெருமானுடன் போயினேன். பிக்ஷாடனர் அம்முனிவர்களுடைய பத்தினிகளிடத்திற் சென்று பிச்சைகேட்க, அவருக்கு பிச்சைச் கொண்டு வெளியே வந்த முனிபத்தினிகள் அவருடைய சவுந்தரியத்தைக் கண்டு காமவிகாரங்கொண்டு அவர்மேல் கந்தபுஷ்பாதிகளைச்சொரிந்து

தங்களுக்கு உடையவிழ்ந்ததுந் தெரியாது அவர்பின் தொடரத்தலைப் பட்டனர்.

நான் அந்த முனிவர்கள் தவம் செய்துக்கொண்டிருக்கும் இடத்தில் நுழைந்து அங்குமிங்குமாய் திரிந்துக் கொண்டிருந்தேன். அந்த முனிவர்கள் என்னைக் கண்டவுனே தவநிலையை விட்டெழுந்து என்னைப் போகமாதெனக்கருதி என்பின் தொடர்ந்தார்கள். அந்த சமயத்தில் அந்த முனிவர்களில் விருத்தாப்பியரா யிருந்த சிலர், முனிபத்திணிகள் காமமீதூர்ந்து பிட்சாடனர் பின்தொடர்ந்து போவதைக்கண்டு அவரைக் கொல்ல வெண்ணி அபிசாரயாகஞ் செய்து அதிலெழுந்த மான், அரவம், முயல்கன் முதலிய எல்லாவற்றையும் ஏவியும் இறவாதிருக்கக்கண்டனர். பிறகு அந்த முனிவர்கள் பிட்சாடனரைப் பரமேஸ்வரனெனத் தெரிந்து பலவாறு ஸ்தோத்திரஞ் செய்ய, பரமேஸ்வரன் அம்முனிவர்களை நோக்கி இந்த அரணியத்தில் சிவலிங்க ஸ்தாபானஞ் செய்து என்னை ஆராதிப்பீராயின் உங்களுக்கு மோக்ஷம் கைகூடுமென்று கட்டளையிட்டு அவர்களுக்கு ஆநந்தநடன தரிசனம் காட்டி யருளினர். அச்சமயத்தில் ஆங்கு வந்திருந்த பிரமாதிசகல தேவர்களும் அந்த நடனதரிசனத்தைக்கண்டு ஆனந்த சாகரத்தில் மூழ்கினார்கள். அவ்வானந்தத் தாண்டவம் எனக்கிப்போது நித்திரையில் தோன்றினபடியால் அசைவுற்றேன்'' என்றனர்.

இதைக் கேட்ட ஆதிசேஷன்மிகவும் ஆச்சரியமடைந்து தானும் அந்நடனதரிசனத்தைக் காண வேணடுமென்று, நாராயண மூர்த்தியை நோக்கி நமஸ்கரித்து "சுவாமி! அடியேனுக்கும் அந்நடன தரிசனம் கிடைக்கும்படி அனுக்கிரகம் செய்யவேண்டும்'' என்று கேட்டுக்கொள்ள, ஸ்ரீவிஷ்ணு மூர்த்தி ஆதிசேஷனை நோக்கி "நீசிவ தரிசனத்தைக் கேட்டமாத்திரத்தில் உனக்கு சிவபக்தியுண்டாகிநடன தரிசனத்தில் அத்தியந்த அபேட்சை மேலிட்டிருப்பதால் சிலகாலம் வரையில் நீ சிவாராதனைச் செய்வையாகில், நீசிவகடாக்ஷம் பெற்று அந்நடன தரிசனத்தைக் காணப்பெறுவாய் என்று தெரிவித்தனர்.

(இன்னும் வரும்)

இங்ஙனம்:

தி-அரங்கசாமி நாயுடு,

லிகிதர்-சைவசித்தாந்த மகாசமாஜம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மெய்யுணர்வு.

---

அதாவது மெய்யாகிய பொருளையுணர்தல் - ஓர் அறி உயிரெனும் புல்முதலாகச் சொல்லப்பட்ட பலபிறவிகளுட் சென்று ஆன்மாக்கள் புனிதமாய மனிதப்பிறவியை யடைகின்றனவெனநாமறிகின்றோமாதலால், மத்திய உலகமாய இம்மண்ணுலகத்துத் தோன்றிய நாம் பெற்ற அரிய மானுடையாக்கை யாலாகிய பயனை எய்த வேண்டுமோயின் மெய்யாகிய பொருள் ஈதென உணர்தலே வேண்டும். அன்றியும், ஐம்பூதச்சேர்க்கையாலாய இவ்யாக்கை நீர்க் குமிழியும் வானின் மின்னலும்போற் றோன்றிமறைவதாகவும் உள்ளது. ஆதலால் இவ்யாக்கை விரும்பிமகிழும் நில்லாத இளமையையும், நிலையாத செல்வத்தையு மெய்யென வெண்ணி நாம் வறிதே காலத்தைப் போகவிடாது மெய்யுணர்வையடைய விரைந்து முயலல் வேண்டும். அம்முயற்சியாவது ஒருவனுக்கு எழுமையும் உதவும் கல்வியேயாம். அக்கல்வியைக் கற்குங்காலத்தும், உலகநூல் ஓதி உறு பயன் அற்றுப் போகாமல், அறிவு நூல்கற்று அடங்கி நிற்றல் வேண்டும். அடங்கி நிற்றலாவது, நூல்களிற் கற்ற வண்ணம் உயிர்க்குறுதிபயப்பதாய சன்மார்க்க வழியில் செல்வதேயாம். அச்சன்மார்க்க வழியிற் செல்வதற்குபாயம் நாம்யாதொரு உயிர்க்கும் ஊறு செய்யாதிருப்பது ஒன்றேயாகும்.

அவ்விதம் நாம் ஓர் உயிர்க்கும் ஊறு செய்யாதிருக்க விரும்பின், கொலைசெய்தல், கள்ளுண்டல், பொய் மொழிதல், சூதாடல், களவாடல் முதலியமாபாதகங்களினின்றும் விலகியிருத்தல் வேண்டும். அவ்வைந்தையும் தவிர்த்தாலன்றி, நாம் மெய்யையுணரும் மெய்யராக இருத்தல் முடியாது. அது என்னையோ வெனில் எல்லாவுயிர்களையும் தன்னுயிர் போல்நோக்கும் அந்தணத்தன்மை வந்தாலன்றி மெய்காணுதல் கூடாதாதலால் கொலைசெய்பவரும், களவாடுநரும், பொய்மைகூறுபவரும்,

கள்ளுண்பவரும், புலாலுண்பவரும், பிறவுயிர்களுக்கு ஊறு செய்பவர் ஆகி மெய்காணுதல் கூடாதவராவர்.

இனி, அந்தணத்தன்மையடைந்தோரும், ஐம்புலனடக்கிய அறிஞரும் மயங்கிய அறிவுடையோர் கூறுமதங்களிற் சென்றுமயங்குவராயின் அவரும் மெய்காணுதல் கூடாதவரே யாவர்.

இது பற்றியன்றே, மெய்கண்டார் வழித்தோன்றிய உமாபதி சிவமும்,

"..............................................நித்தலுமே,
பூசிமுடித்துண் டுடுத்துப் பூங்குழலார் தங்கலவி
யாசைதனிற் பட்டினப வார்கலிக்கு—ணேசமுற
நின்று திளைக்கு மிதுமுத்தி யல்லதுவே
றின்று திளைக்கு மிதுமுத்தி—யன்றன்
றிலகா விருளலகை போலிகலே பேசு
முலகா யதன்பா லுறாதே—பலகாலுந்
தாம்பிர மங்கண்ட வர்போற் றம்மைக் கண்டாங் கதுவே
நாம்பிரம மென்பவர் பாலண்ணாதே—யூன் றனக்குக்
கொன்றிடுவ தெல்லாங் கொலையல்ல வென்றுகூறித்
தென்றுமற மேதெய்வ மென்றென்று—வென்றிப்
பொறையே யெனும்புத்தன் பொல்லாத புன்சொன்
மிறையே விரும்பிவிழாதே—சிறைமேனி
வாழ்பவர் போன்மண்ணுலகின் மன்னியுரோமம்பரித்துத்
தாழ்வுநினையாது துகிறனகற்றி—யாழ்விக்கு
மஞ்சுமடக்குமது முத்தியென்றுரைக்கும்
வஞ்சமணன் பாழிமருவாதே—செஞ்சொலா
லாதிமறையோதியதன் பயனொன்றும் மறியா
வேதியர் சொன்மெய்யென்று மேவாதே—யாதியின்மே
லுற்றதிருநீறுஞ் சிவாலயமுமுள்ளத்துச்
செற்றபுலையர்பாற் செல்லாதே—நற்றவஞ்சேர்
வேடமுடன்பூசையருண் மெய்ஞ்ஞானமில்லாத
மூடருடன் கூடிமுயங்காதே—நீட
வழித்துப் பிறப்பதறியாதரனைப்
பழித்துத் திரிபவரைப்பாராதே"

என வற்புறுத்திக் கூறியது. ஏனெனில் உலகவின்பத்தையே பொருளெனக் கொண்டு மயங்குஞ் சில மதங்களும், இறைமைக்குணங்கள் இல்லாது செத்துப் பிறக்கின்ற தெய்வங்களை நாயகமாகக் கொள்ளுகின்ற சிலமதங்களும், தம்மையே கடவுள் என்று சிலர் கூறுகின்ற மதங்களும், உண்மை காணுதற்குரிய மதங்களாகா. அது ஏன் எனில், இம்மதங்கள் எல்லாம், மறுமையும், நரகமும், வீடும், உண்டென அறியாதனவாய், வெள்ளியை இப்பியென்றும், குற்றியை மகன் என்றும், மயங்குவனவாய் உள்ளன. ஆதலால், உலகத்து முப்பொருள் உண்மையுணர்ந்து, தோற்றமும் ஈறும் இல்லாதது பதியென அறிந்து நிற்றலே மெய்யுணர்வு ஆகும்.

இனி முப்பொருளாவது பதி, பசு, பாசமேயாம். இம்மூன்றும் நித்தியமாயினும் முதற்பொருளாய பதி செத்துப் பிறக்கின்ற தகுதியுடையது அன்று ஆதலால் அதுவே மெய்ப்பொருளாம். அப்பொருள் எது எனின் சங்காரகாரணன் ஆகிய தலைவனேயாம். சிருட்டி திதியைச் செய்கின்ற தலைவராய மற்றைய இருவர் சங்கார காலத்தில் அழிந்து போகின்றனர் ஆதலால் யாவரையும் அழித்துத் தனித்து நிற்கும் சங்காரகாரணனே கருத்தாவாவன். அவனே மலரில் மணமும், எள்ளில் எண்ணெயும்போல் எல்லா ஆன்மாக்களிடத்தும் நீக்கமற நிறைந்துள்ளவன் என்பதைப் பாண்டியன் பிரம்படியும், அருச்சுனன் வில்லடியும் பட்ட இடங்கள் இவையென உணர்ந்த அறிஞர் மறுப்பதற்கில்லை. இனி, அவனடிசென்று சேர்வதைப்போதிக்கும் மெய்நூல்களே மெய்ப்பொருளை அறிதற்குக்கருவிகளாகும். அவை, நெருப்பிலிட்டும், ஆற்றில் விட்டும் முறையே வேகாமலும், எதிரேறியும், ஆண்பனை பெண்பனையாகியும், பாம்பின் விடந்தீர்ந்தும், எலும்பு பெண்ணாகியும், இறந்த மகன் எழுந்தும், நீற்றறை குளிர்ந்தும், யானை அலறிச்சரணிட்டும், மலையே தெப்பமாகியும், ஆற்றிலிட்ட பொன் குளத்திடை வந்தும், பாலை நெய்தலாகியும், சோதியாகிய பரம்பொருளைச்சோறு இரந்திடச் செய்தும், ஊமைப் பெண்ணைப் பேசுவித்தும், புத்தரைவாதில் வென்றும் புகழுற நின்ற தேவார திருவாசகங்களும், சிவஞானபோதமுதலாகச் சொல்லப்பட்ட பதினான்கு சாத்திரங்களுமே யாகும்.

ஆதலால் உயிர்க்குறுதியென இவைகளை அருளிய சைவசமயாசாரியர்கள் நால்வரையும், சந்தான குரவர் நால்வரையும் வழிபட்டு அவர்

கள் பரிந்தோதிய ஞானநூல்களை ஓதி உய்பவரே மெய்யுணர்வு உடையவராவர்.

இவைவிட்டுப் பொய்திகழும் உலகநடையைக் கைப்பற்றி, மெய்யெனப்பெயர் பூண்டுள்ளபொய்யாகிய தேகத்தைப்பேணுதல் கருதி, வாய்மை மறந்து, தவம் எனும் புலித்தோல் போர்த்து; வேட்டுவன் புட்களை மயக்க இரைகாட்டல் போல் உலகோரைவஞ்சித்து, விலாப்புடைக்க உண்டு திரியும் போலி அடியவர்களும், சிறுபயன் கருதித் தாம் கொண்ட கொள்கையினின்று மாறி மலங்கு மீனின் கொள்கையுடையராய்,

"மிடுக்கிலாதானை வீமனேவிரல் விஜய
  னே வில்லுக்கிவனென்றும்
கொடுக்கிலாதானைப்பாரியே யென்று கூறி
  னுங்கொடுப்பாரிலை
பொடிக்கொள்மேனியன் புண்ணியன் புகலூ
  ரைப்பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேல மருலகம் ஆள்வதற்கு
  யாதும் ஐயுறவில்லையே"

என்ற பரமாசாரிய சுவாமிகளது புத்திபோதிப்பை மறந்து, பரசமயத்தவர் விரும்பப்பலகூறி, இடர்ப்படுகின்றவரும், மெய்யுணர்வுடையோராகார். ஆகையால் நமரங்காள், அண்டர்பிரான், நான்முகத்தோன், ஆழியான் ஆகிய இவர்கள் தொழும் புண்டரிகமலர்த்தாளைப் போற்றி, மண்டனில் பிறந்தபெரும்பயன் எய்த நங்கையகப்பட்ட மெய்ப்பொருளாகிய சைவசித்தாந்த சமயத்தையும் அதின் தலைவராகிய ஆசாரியர்களையும், உண்மை நாயன்மார்களையும், வழிபட்டுச் சன்மார்க்க நெறிநின்று, ஒளிவளர்விளக்காய் உலப்பிலா ஒன்ருய், உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வாய், தெளிவளர் பளிங்கின் திரண்மணிக்குன்ருய், சித்தத்துள் தித்திக்குந் தேனாய், அளிவளர் உள்ளத்து ஆனந்தக்கனியாய், அம்பலம் ஆடரங்காக வெளிவளர் தெய்வக்கூத்துகந்த சிவபரம் பொருளைப் பரவி, யாடி, கைகொட்டி, பதமலர்சூடி, மெய்புணர்வுடையோராய் வாழ்வோமாக—சுபம்.

கி. குப்புச்சாமி,
(களந்தைகிழான்)